# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம்,
தமிழ்ப் பிரிவு

# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

1

## நபி(ﷺ) அவர்கள் நோயுற்ற போது ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஓதிய துஆ

بِسْمِ اللَّهِ أَرْقِيكَ مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيكَ

مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنٍ حَاسِدٍ

اللَّهُ يَشْفِيكَ بِسْمِ اللَّهِ أَرْقِيكَ

பிஸ்மில்லாஹி அர்கீக, மின் குல்லி ஷைஇன் யுஃதீக, மின் ஷர்ரி குல்லி நப்(ஃ)சின் அவ் அய்னின் ஹாஸிதின், அல்லாஹு யஷ்பீ(ஃ)க, பிஸ்மில்லாஹி அர்கீக

அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப் பார்க்கிறேன். உமக்குத் தொல்லை தரும் அனைத்து அம்சங்களிலிருந்தும், பொறாமை கொள்ளக்கூடிய அனைவரின் அல்லது கண்களின் தீமையிலிருந்தும் உமக்கு அல்லாஹ் நிவாரணமளிப்பானாக. அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப் பார்க்கிறேன்.

அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 4403

# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

2

## இப்ராஹீம்(அலை) மற்றும் முஹம்மது(ﷺ) இருவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஓதிய துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّآمَّةِ مِنْ كُلِّ
شَيْطَانٍ وَّهَآمَّةٍ وَّمِنْ كُلِّ عَيْنٍ لَّآمَّةٍ

அஊது பி கலிமாத்தில்லாஹித் தாம்ம(த்)தி
மின் குல்லி ஷைத்தானின்வ்வ ஹாம்ம(த்)திவ்
வ மின் குல்லி ஐனில் லாம்ம(த்)தின்

அல்லாஹ்வுடைய பரிபூரணமான வார்த்தைகளைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும், நச்சுப் பிராணியிடமிருந்தும், தீய எண்ணத்துடன் தீண்டும் கண்ணிலிருந்தும், அவனிடம் பாதுகாப்புக் கோருகின்றேன்.

புகாரி 3371

# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

3

بِاسْمِ اللهِ يُبْرِيكَ،
وَمِنْ كُلِّ دَاءٍ يَشْفِيكَ،
وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ،
وَشَرِّ كُلِّ ذِي عَيْنٍ

பிஸ்மில்லாஹி யுப்ரீக, வ மின் குல்லி தாயின் யஷ்பீக, வ மின் ஷர்ரி ஹாசிதின் இதா ஹஸத, வ ஷர்ரி குல்லி தீ அய்னின்

அல்லாஹ்வின் பெயரால், அவன் உங்களுக்கு குணமளிப்பானாக! அனைத்து நோயிலிருந்தும் உங்களுக்குச் சுகமளிப்பானாக. பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது ஏற்படும் தீமையிலிருந்தும் கண்ணேறு உள்ள ஒவ்வொருவரின் தீமையிலிருந்தும் காப்பானாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 4402

# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

4

## கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற நபி(ﷺ) அவர்கள் ஓதிய இரு ஸூராக்கள்

(பல்வேறு அவ்ராதுகளைக் கொண்டு) ஜின், மனித கண் திருஷ்டிகளிலிருந்து நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்பு வேண்டுபவர்களாக இருந்தார்கள். பிறகு இரண்டு குல் ஸூராக்கள் (113, 114 வது ஸூராக்கள்) இறங்கியதும் இவ்விரண்டையும் எடுத்துக் கொண்டு ஏனையவற்றை விட்டு விட்டார்கள்.

அறிவிப்பாளர்: அபூஸயீத் (ரலி) அவர்கள், திர்மிதி 1984, நஸயி 5399, இப்னு மாஜா 3502

# கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற ஓத வேண்டியவை

5

## ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒன்றைக் கண்டால் துஆ செய்தல்

بَارَكَ اللَّهُ لَكَ

பாரக்கல்லாஹு லக

அல்லாஹ் உங்களுக்கு

பரக்கத் செய்வானாக !

அறிவிப்பாளர்: அபூஉமாமா(ரலி) அவர்கள், அஹ்மத் 16023